தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 28, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 10, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.”

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டை ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

195—

சார் கருவூலம்

***20331—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[*2013 ஏப்ரல் 10*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசில், ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம் என்ற அடிப்படையில், கீழ்வேளூர் வருவாய் வட்டத்திற்கென புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது குறித்த கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் வட்டத் தலைநகராக இருப்பதால், அதைச் சுற்றி பல்வேறு அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், பொறியியல் கல்லூரி ஆகியவை இருக்கின்றன. எனது தொகுதியில் ஏராளமான அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்குச் சேரவேண்டிய சம்பளம் மற்றும் இதர பணப் பயன்களைப் பெறவேண்டுமானால், கீழ்வேளூரிலிருந்து வெகு தொலைவிலுள்ள நாகப்பட்டினம் கருவூலத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், அரசின் நலத் திட்டங்கள்மூலமாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்களைப் பெற்றுத்தர வேண்டுமானால், அதற்கும் நாகப்பட்டினத்திலுள்ள கருவூலத்திற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. இதனால், காலதாமதமும், நேர விரயமும் ஏற்படுகின்றது. எனவே, கீழ்வேளூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட்டால், அரசு ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே, கீழ்வேளூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை தேவையின் அடிப்படையில், நியாயமான கோரிக்கைதான் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நன்றாகவே

2013 ஏப்ரல் 10]

உணர்ந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற 229 வட்டங்களிலும், ஒரு வட்டத்திற்கு ஒரு சார்நிலைக் கருவூலம் என்ற கொள்கை அடிப்படையில், பணிகளை எடுத்துக் கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் பயனாகத்தான் சென்ற வருடம்கூட 14 சார்நிலைக் கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதனையும் நான் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஆண்டு கீழ்வேளூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கே சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தமைக்கு எனது சார்பிலும், கீழ்வேளூர் தொகுதி மக்களின் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருகின்ற நல்லாட்சியைத் தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) கலசப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதனடிப்படையில், கடந்த ஆறு மாத காலமாக வட்டாட்சியர் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, கலசப்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே சார்நிலைக் கருவூலம் இல்லாத வட்டங்கள் அனைத்திலுமே புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியின் கொள்கை முடிவு. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் தீவிர பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

196—

தரம் உயர்த்துதல்

***7870—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளாறில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, தெள்ளாறில் தற்போது 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 2 x 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தின் உச்ச மின் பளு 12 எம்.வி.ஏ. ஆகும். இப்பகுதியிலுள்ள மின் பளு தேவையை நிறைவு செய்ய 33/11 கி.வோ. துணை மின் நிலையமே போதுமானது. எனவே, இந்தத் துணை மின் நிலையத்தை